**தலைப்பு 145 – சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டதுடன் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 27 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்தம் மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்பட வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உபபிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிவருவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறமுடியாதுள்ளது

(ஆ) சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை**

2018 நவம்பர் 21 ஆம் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் தேவைப்பாடுகளிலிருந்து விலகிய சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மேற்படி சுற்றறிக்கையின் 7 (II) இன் பிரகாரம் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் சார்பில் ஏனைய அமைச்சுக்களால் சேகரிக்கப்படும் வருமானம் பொதுத் திறைசேரியால் விடுவிக்கப்பட்ட கட்டுநிதியாக கருத்தில் கொள்ளப்பட்டு ஏசீஏ–3 படிவத்தை பயன்படுத்தி நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் சார்பில் அவ்வாறு சேகரிக்கப்பட்ட ரூபா 5,688,182 தொகை நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏசீஏ–1 படிவத்தில் வரியல்லா வருமானம் மற்றும் ஏனையவைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தன. | 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | ஏசீஏ – 1 படிவத்தின் பிரகாரம் ரூபா 5,688,182 பெறுமதியில் ரூபா 1,708,943 தொகை காசாக பெறப்பட்டிருந்தது. ரூபா 3,979,239 ஆன மிகுதி தொகை குறுக்குப் பதிவுகள் ஊடாக பெறப்பட்டிருந்தன. ஏசீஏ–3 படிவத்தில் ஏனைய வளங்கள் தலைப்பின் கீழ் காட்டப்பட்ட ரூபா 96,514,079 பெறுமதியில் காசாக பெறப்பட்ட ரூபா 1,708,943 தொகை உள்ளடக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சுற்றறிக்கையின் 7(vi) ஆம் பந்தியின் பிரகாரம் ஏனைய பிரதான பேரேடுகளின் கீழ் ஏற்பட்ட செலவினங்களாக முற்பண ''பீ'' கணக்கிற்குரிய ரூபா 2,589,769 தொகை இணக்கக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டியிருந்தது. மேலும் நிதிப்பிரமாணம் 208 இன் கீழ் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் செலவின விடயங்கள் தொடர்பாக ஏற்பட்ட செலவினங்களாக ரூபா 5,121,162,903 தொகையும் ஏனைய பிரதான பேரேடுகளின் கீழ் ஏற்பட்ட செலவினங்களாக முற்பண ''பீ'' கணக்கிற்குரிய ரூபா 61,980 தொகையும் இணக்கக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்தன. எனினும் அப் பெறுமதிகளை சரியாக வரவு மற்றும் செலவு வைப்பதன் மூலம் கட்டுநிதி இணக்கக் கணக்கு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | கட்டுநிதிக் கணக்கு மற்றும் செலுத்த வேண்டிய கட்டுநிதிக் கணக்கு ஆகிய இரண்டு வகையான கணக்குகளும் எங்களால் தயாரிக்கப்பட்டிருந்தது. அதில் எங்களால் பின்பற்றப்பட்டிருந்த முறைமை ஊடாக அந் நோக்கம் அடையப்படுகின்ற போதிலும் அரச கணக்குகள் திணைக்களத்தின் 267/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையில் அது தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட மாதிரி எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | நிதிப்பிரமாணம் 66 மற்றும் 69 இன் பிரகாரம் 37 மீண்டெழும் செலவின விடயங்களிற்கிடையே மாற்றப்பட்ட ரூபா 10,513,000 தொகையான நிதியேற்பாடு மற்றும் 02 செலவின விடயங்களிற்கிடையே மாற்றப்பட்ட ரூபா 20,000,000 தொகையான நிதியேற்பாடு என்பன சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட ஏசீஏ–2 படிவத்தில் காட்டப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | 2018 ஆம் ஆண்டு பாதீட்டு மதிப்பீட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகள் முழுமையாக செலவிடப்பட்டிருந்ததால் நிதிப்பிரமாணம் 66 மற்றும் 69 இன் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டம் 01 இன் 24 ஏனைய செலவின விடயங்களிலிருந்து நிகழ்ச்சித்திட்டம் 01 இன் 13 மீண்டெழும் செலவின விடயங்களிற்கு ரூபா 10,513,000 நிதியேற்பாட்டை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதனால் நிதிப்பிரமாணங்களிற்கு இணங்க ஒரே செயலாற்றல் அறிக்கைக்குரிய 37 செலவின விடயங்களிற்கிடையே நிதியேற்பாடுகள் சேர்க்கப்பட்டு அல்லது கழிக்கப்பட்டிருந்ததனால் அப் பெறுமதிகள் நிகழ்ச்சித்திட்டத்தினுள் சீராக்கம் செய்யப்பட்டிருந்தன. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பாக அறிக்கையிடும் போது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அச் சொத்துக்களின் பிரதான பேரேட்டு மீதியை தனிப்பட்ட சொத்துக்களின் பெறுமதியுடன் பரீட்சிப்பதன் மூலம் பெறுமதிகள் ஒன்றுடனொன்று சமப்பட்டுள்ளது என்பதை சரிபார்த்திருக்கவில்லை. | -மேற்படி- | இணங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பாக அறிக்கையிடும் போது அச் சொத்துக்களின் பிரதான பேரேட்டு மீதி தனிப்பட்ட செத்துக்களின் பெறுமதியுடன் பரீட்சிக்கப்பட்டு மீதிகள் சமப்பட்டுள்ளதை சரிபார்த்த பின்னர் அறிவிக்கப்படும். |

**1.6.2 நிதி நிலைமைக் கூற்று**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகத்தின் பணியகத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 23,098,945 பெறுமதியான நிதியல்லாச் சொத்துக்கள் மற்றும் ரூபா 362,686,407 பெறுமதியான நடைபெறும் வேலை என்பன உள்ளடங்கிய ரூபா 644,035,255 பெறுமதியான நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் ஏசீஏ–6 படிவத்தில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்கள் கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும். | அரச கணக்குகள் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் கணனிமயப்படுத்தப்பட்ட முறைமைகள் மூலம் செலவின விடய இலக்கங்கள் 2101, 2103, 2104 மற்றும் 2105 இன் கீழ் ஏற்பட்ட செலவினங்களிற்காக மாத்திரம் சொத்துக்கள் உருவாக்கப்படுவதால் செலவின விடய இலக்கம் 2202 இன் கீழ் ஏற்பட்ட செலவினங்கள் சொத்துக்களாக இனங்காணப்பட முடியாதிருந்தன. |

**1.6.3 நிதிச் செயலாற்றல் கூற்று**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தவறான போராளிகள் மற்றும் போதைக்கு அடிமையானவர்களை அபிவிருத்தி செய்து பயிற்சியளிப்பதற்காகவும் புனர்வாழ்வளிப்பின் பின்னரான உதவி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பாகவும் ஏற்பட்ட ரூபா 9,409,455 மீண்டெழும் செலவினம் செலவினத் தலைப்பு 145-1-2-5-2002 இன் கீழ் மூலதன | செலவின வகைப்படுத்தல் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்கு முன்னர் புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகத்தின் பணியகத்தின் அனைத்து செலவினங்களிற்காகவும் திறைசேரியால் மூலதன செலவின் கீழ் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க அனைத்து செலவினங்களும் மூலதன செலவினங்களின் கீழ் |

| | | |
|---|---|---|
| செலவினங்களாக கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. | | மேற்கொள்ளப்பட்டிருந்தன. |

**1.6.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| அவதானிப்பு | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | | | |
| (அ) நிதிப்பிரமாணம் 104(1)அ | முன்னாள் அமைச்சரின் பதவியணியினரிற்கு ஒதுக்கப்பட்ட பின்னர் மீண்டும் கையேற்கப்பட்டிருந்த வாகனங்களிற்கு ஏற்பட்டிருந்த சேதங்கள் தொடர்பாக ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வாகனங்களை கையேற்ற சமயத்தில் அச் சேதங்கள் ஏற்பட்டிருந்ததுடன் டபிள்யூபி கேஏ – 0002 வாகனத்தின் நட்டங்களை அறவீடு செய்வதற்கு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| (ஆ) நிதிப்பிரமாணம் 104(4) | நட்டங்களும் சேதங்களும் ஏற்பட்ட திகதியிலிருந்து 03 மாதங்களினுள் விபரமான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 05 வாகனங்களிற்கு 06 சந்தர்ப்பங்களின் போது ஏற்பட்ட விபத்துக்கள் தொடர்பாக அத்தகைய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | 04 விபத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி விபத்துக்களிற்கான விசாரணைகள் பூர்த்தி செய்யப்படும் வரை சாரதி மற்றும் பொறுப்பான உத்தியோகத்தரின் சம்பளம் மற்றும் படிகளை நிறுத்தி வைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| (இ) நிதிப்பிரமாணம் 237(ஆ) | பொருட்களை வழங்கியமைக்காக கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் பெருள் பெறப்பட்டுள்ளதெனவும் உரிய பொருட்பதிவேடு மற்றும் இருப்பு புத்தகம் போன்றவற்றில் அப் பொருட்கள் | -மேற்படி- | அத்தகைய செயற்திறனின்மைகளை தடுப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 443,118 பெறுமதியான 19 பொருள் உருப்படிகளிற்கான பொருட்கள் பெறப்பட முன்னரே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | | |
| (ஈ) | நிதிப்பிரமாணம் 115 | 2017 ஆம் ஆண்டின் பொறுப்புக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்காத பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்காக அச் செலவின விடயங்களின் நோக்கங்களிற்கு முரணாக ரூபா 943,674 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக நிதிப்பிரமாணம் 115 இன் பிரகாரம் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 115 இன் பிரகாரம் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | கட்டிடங்கள் திணைக்கத்தினால் 2018 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் வேண்டுகோள் மேற்கொள்ளப்பட்டிருக்காததன் காரணமாக பொறுப்பொன்றாக கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்காததுடன் செலவின விடயம் 145-01-02-2001 இன் கீழ் இல. சீ40, கெப்பெற்றிபொல மாவத்தை உத்தியோகபூர்வ இல்லத்தின் மலசலகூட புனரமைப்பு மற்றும் சமையலறையை சுற்றியும் கழிவுநீர் குழாய்களினதும் திருத்தத்திற்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எதிர்காலத்தில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் போது நிதிப்பிரமாணம் 115 இன் கீழ் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | நிதிப்பிரமாணம் 315(1),(2) மற்றும் 755 | முன்னாள் அமைச்சர்கள், பிரதி அமைச்சர் மற்றும் ஊடக செயலாளரிற்கு வழங்கப்பட்ட ரூபா 702,869 பெறுமதியான பொருளிருப்பு உருப்படிகள் மற்றும் அமைச்சால் முன்னாள் அமைச்சரிற்கு கையளிக்கப்பட்ட ரூபா 35,000,000 பெறுமதியான உத்தியோகபூர்வ வாகனம் என்பன கடமைகள் முடிவடைந்த பின்னர் மீண்டும் கையேற்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 315 மற்றும் 755 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொருளிருப்பு உருப்படிகள் களஞ்சியங்களிற்கு மீண்டும் கையளிக்கப்பட வேண்டும் என பல தடவைகள் கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தன. முன்னாள் அமைச்சரிற்கு ஒதுக்கப்பட்ட டபிள்யூபிகேபி 7476 ஆம் இலக்க வாகனம் திரும்ப கையளிக்கப்பட வேண்டும் என 05 தடவைகள் அறிவிக்கப்பட்டிருந்தன. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | செலவின விடயக் குறியீடு 145-01-02-04-1503 இன் கீழ் ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களின் புனரமைப்பு அதிகாரசபைக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,080 மில்லியன் தொகையான நிதியேற்பாட்டில் ரூபா 539.3 மில்லியன் நிதியேற்பாடு கட்டுநிதி பெறப்படாததன் காரணமாக சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களின் புனரமைப்பு அதிகாரசபையின் மீண்டெழும் செலவினத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 2,080 மில்லியன் தொகையான நிதியேற்பாட்டில் ரூபா 539.3 மில்லியன் கூட்டுமொத்தமான நிதியேற்பாடு ஆண்டின் இறுதியளவில் சேமிக்கப்பட்டிருந்தது. கட்டுநிதி முறையாக பெறப்பட்டிருக்காதமை இதற்கான காரணமாகும். |
| (ஆ) | வருடாந்த மதிப்பீட்டின் ஊடாக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்காத 05 மூலதன செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 3,381 மில்லியன் தொகையான குறைநிரப்பு நிதியேற்பாட்டில் ரூபா 1,312.07 மில்லியன் தொகை சேமிக்கப்பட்டிருந்தது. 03 செலவின விடயங்களிற்குரிய சேமிப்புக்களின் சதவீதம் 46 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டன. | -மேற்படி- | வழங்கப்பட்டுள்ள சட்ட விதிகளின் பிரகாரம் போராளிகள் சமூகமயமாக்கப்படுவதை விரும்பாமை, தொழில்சார் மற்றும் வாழ்வாதார நடவடிக்கைகளில் அம் மானியங்களை பயன்படுத்துவதற்கு திறைசேரியின் அங்கீகாரம் கிடைக்காமை மற்றும் ஆண்டின் இறுதியில் விலைச்சிட்டைகளை தீர்ப்பனவு செய்ய முடியாதிருந்தமை போன்ற காரணங்களினால் விலைச்சிட்டைகளை தீர்ப்பனவு செய்வதற்கு கோரப்பட்ட குறைநிரப்பு நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான செயற்திட்டம் தொடர்பாக 2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட செலவினங்களிற்கு உரியதாக மாவட்டச் செயலகங்களால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 755.3 மில்லியன் பெறுமதியான | -மேற்படி- | 2017 ஆம் ஆண்டிற்கான ரூபா 133.7 மில்லியன் பெறுமதியான விலைப்பட்டியல்களை தீர்ப்பனவு செய்வதற்கு வழங்கப்பட்ட குறைநிரப்பு நிதியேற்பாட்டிலிருந்து ரூபா 107.9 மில்லியன் தொகை தீர்ப்பனவு செய்யப்பட்ட பின்னர் காணப்பட்ட சேமிப்பாக இது இருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | நிலுவையாகவுள்ள விலைப்பட்டியல்களை தீர்ப்பனவு செய்வதற்கு தேவையான தொகையை விட ரூபா 781.1 மில்லியன் தொகையான குறைநிரப்பு நிதியேற்பாடு மிகையாக பெறப்பட்டிருந்ததால் ரூபா 25.8 மில்லியன் தொகையான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | 02 மூலதன செலவின விடயங்களிற்குரிய ரூபா 1,200 மில்லியன் மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு மற்றும் அச் செலவின விடயங்களிற்காக பெறப்பட்டிருந்த ரூபா 114 மில்லியன் தொகையான குறைநிரப்பு நிதியேற்பாடு என்பவற்றை விஞ்சி ரூபா 206.42 மில்லியன் கூட்டுமொத்தமான செலவினங்கள் ஏற்பட்டிருந்ததால் மதிப்பீடுகள் யதார்த்தமானதாக தயாரிக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கட்டுநிதிகள் போதாததன் காரணமாக ரூபா 13.9 மில்லியன் பெறுமதியான விலைப்பட்டியல்கள் கையில் காணப்பட்டன. நிதியேற்பாடு போதாததால் மேலதிக நிதியேற்பாடு பெறப்பட வேண்டியிருந்தது. மதிப்பீடுகளை தயாரிக்கும் போது விலைப்பட்டியல்களின் பெறுமதியை உள்ளடக்குவது சாத்தியமற்றிருந்ததால் நிதியேற்பாடுகளை விஞ்சி செலவினங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தன. |

**2.2 முற்பணங்களை வழங்குதலும் தீர்ப்பனவு செய்தலும்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பதவி வறிதாக்கப்பட்ட அல்லது சேவை இடைநிறுத்தப்பட்ட 02 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 235,206 கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு 7 ஆண்டுகள் தொடக்கம் 8 ஆண்டுகள் வரையான காலவீச்சில் நிலுவையாக காணப்பட்ட போதிலும் அத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதிகள் உடனடியாக அறவிடப்பட வேண்டும். | கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு கடிதங்கள் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளன. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பிரதான நோக்கங்களிற்கு புறம்பான செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம் உற்பத்திக் கூட்டுறவுகள் ஊடாக வட மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட சிறு கைத்தொழில்களிற்கு உதவுவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,000 மில்லியன் தொகையான நிதியேற்பாட்டில் ரூபா 125.57 மில்லியன் தொகை விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்தின் கீழ் கிழக்கு மாகாணத்திலுள்ள 03 மாவட்டங்களிற்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும் ரூபா 250 மில்லியன் தொகை பனை அபிவிருத்திச் சபைக்கும் வழங்கப்பட்டிருந்தது. | நிதியேற்பாடு வழங்கப்பட்ட நோக்கத்திற்கு இணங்க செயற்பாடுகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். | திறைசேரி அங்கீகாரத்தின் கீழ் மாவட்டச் செயலகங்களிற்கு நிதியேற்பாடுகள் விடுவிக்கப்பட்டிருந்தன. |

### 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விசேட பாதீட்டு முன்மொழிவினை பின்பற்றி தனியார் துறையில் வேலையிலீடுபடுத்துவதற்கு முன்னாள் போராளிகளை புனர்வாழ்வளித்து சமூகமயப்படுத்துவதன் பொருட்டு சம்பள நிவாரண திட்டமொன்றை அமுல்ப்படுத்துவதற்காக ரூபா 250 மில்லியன் தொகையான குறைநிரப்பு நிதிறேபாடு 2018 சனவரி 05 இல் | நிதியேற்பாடு திட்டமிடப்பட்டவாறு வினைத்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். | இச் செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் தொடர்பான சட்ட விதிகள் திறைசேரியால் குறித்துரைக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் புனர்வாழ்வளிக்கப்பட்ட தவறான வழியில் சென்ற போராளிகளாக அந்த ஆட்களை சமூகமயப்படுத்துவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் அந் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. வெவ்வேறு வகையில் அத்தகைய நிதியேற்பாட்டை பயன்படுத்துவதற்கான செயற்திட்டம் மற்றும் முன்மொழிவுகளை அமுல்ப்படுத்துவதிலுள்ள பிரச்சனைகள் உள்ளடங்கிய அமைச்சரவை விஞ்ஞாபனம் 2018 நவம்பர் 02 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க நிதிறேப்பாட்டை உச்சளவு பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. 2018 நவம்பர் 19 ஆம் திகதிய நிதி அமைச்சரின் பரிந்துரையின் பிரகாரம் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்ட முன்மொழிவுகளை இந்த ஆண்டினுள் அமுல்ப்படுத்துவதற்குப் போதியளவு காலம் காணப்படாததன் காரணமாக இது தொடர்பாக சாத்தியவள ஆய்வினை மேற்கொண்ட பின்னர் 2019 ஆம் ஆண்டின் பாதீட்டு முன்மொழிவுகளிற்குள் அத்தகைய முன்மொழிவுகளை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. | | காட்டிய விருப்பமின்மையால் அவ் உதவிகளை வாழ்வாதார உதவிகளாக அவர்களிற்கு வழங்குவதற்கான அங்கீகாரம் திறைசேரியிடம் கோரப்பட்டிருந்த போதிலும் அதற்கான அங்கீகாரத்தை திறைசேரி வழங்கியிருக்காதமை காரணமாக அச் செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடு பயன்படுத்தப்பட முடியாதிருந்தது. |
| (ஆ) | வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் வாழுகின்ற கடன் பிரச்சனைகளிலுள்ள மக்களிற்கு நுண் நிதிக்குரிய கடன் வசதிகளை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டத்திற்காக பெறப்பட்ட ரூபா 1,000 மில்லியன் தொகையான குறைநிரப்பு நிதியேற்பாட்டில் ரூபா 500 மில்லியன் தொகை வட மாகாணத்திலுள்ள 05 மாவட்டங்களிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 500 மில்லியன் மிகுதி தொகை வட மத்திய மாகாணத்திலுள்ள அனுராதபுர மாவட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அந் நிதியேற்பாட்டில் 46 சதவீதத்திற்கு சமமான ரூபா 542.49 மில்லியன் தொகை 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவிடப்பட்டிருந்த போதிலும் அதன் பௌதீக ரீதியான முன்னேற்றம் தொடர்பாக அமைச்சினால் எந்தவொரு மதிப்பீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. நிதி | நடைமுறையில் இனங்காணப்பட்ட பிரச்சனைகளிற்கான தீர்வுகள் உள்ளடங்கிய புதிய முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதன் மூலம் ஆண்டின் ஆரம்பத்தில் பெறப்பட்ட நிதியேற்பாடுகளை வினைத்திறனாகவும் உச்சளவிலும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந் நிகழ்ச்சித்திட்டத்திற்காக அக் காலத்தில் அமைச்சு தயாராக இருக்கவில்லை. அதே காலப்பகுதியின் போது அரசாங்க கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக வட்டியின்றி கடன்களை பெற்றுக்கொள்வதற்கு பயனாளிகளிற்கு இயன்றதாக மத்திய வங்கியின் மேற்பார்வை பிரிவின் கீழ் கிராமங்களிற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. ஆகையால் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களில் ஈடுபடுகின்ற மக்களை பெற்றுக்கொள்வதில் பிரச்சனைகள் அதிகரித்திருந்தன. மேலும் இக் கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் |

| | | |
|---|---|---|
| அமைச்சின் நுண் நிதிக் கடன் முன்மொழிவுத் திட்ட நியதிகள் மற்றும் வழிகாட்டல்களின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் 14 சதவீதமாக உயர்ந்தளவிலான கடன் வட்டி வீதம் மற்றும் ரூபா 20,000 ஆக கருதப்பட்ட கடன் எல்லைகளை விஞ்சி காணப்பட்ட மக்களின் கடன்படுதன்மை போன்ற நடைமுறை சிக்கல்கள் ஏற்பட்டமை காரணமாக ரூபா 457.5 மில்லியன் தொகையான குறைநிரப்பு நிதியேற்பாடு பயன்படுத்தப்பட முடியாதிருந்தது. இனங்காணப்பட்ட பிரச்சனைகளிற்கான தீர்வுகளை உள்ளடக்கிய புதிய முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதன் மூலம் ஆண்டின் ஆரம்பத்தில் பெறப்பட்ட நிதியேற்பாட்டினை வினைத்திறனாகவும் உச்சளவிலும் பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | கடன்களிற்கான ஆகக்கூடிய எல்லை 14 சதவீத வட்டி வீதத்தில் ரூபா 20,000 ஆக காணப்பட்டமை கேள்விக்குரியதாக உள்ளது. இது ஒரு புதிய அறிமுகப்படுத்தலாகவுள்ளது. முன் அனுபவம் இல்லாமல் பல்வேறு முரண்பாடுகளுடன் நிகழ்ச்சித்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. தடைகள் காரணமாக முழுத் தொகையும் பயன்படுத்தப்பட முடியாதிருந்த போதிலும் எதிர்காலத்தில் அத்தகைய சிக்கலை சீர்செய்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன. |

**3.3 நட்டங்களும் சேதங்களும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 110 இல் வழங்கப்பட்ட மாதிரிக்கு இணங்க நட்டங்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட 18 சம்பவங்களிற்குரிய ரூபா 810,624 கூட்டுமொத்தமான நட்டங்கள் தொடர்பான விபரங்கள் முறையாக அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 110 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டை முறையாக தயாரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) 2018 யூலை தொடக்கம் திசெம்பர் வரையான காலப்பகுதியின் போது இரு தடவைகள் விபத்துக்குள்ளாகிய வாகனமொன்று உள்ளடங்கலாக 03 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதில் காணப்பட்ட தாமதம் காரணமாக நட்டங்கள் மதிப்பிடப்பட்டு புத்தகங்களிற்கு கொண்டுவரப்பட முடியாதிருந்தன. | -மேற்படி- | விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன் பெறுமதி கணிப்பீட்டிற்காக எதிர்காலத்தில் மதிப்பீடுகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**4. நல்லாளுகை**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் உள்ளடங்கலாக ஆறு ஊழியர்கள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் வேலையிலீடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. அமைச்சின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் ரூபா 3,663.41 மில்லியன் பெறுமதியான நானாவித செயற்திட்டங்கள் தொடர்பாக போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் பிரிவுகள் அனைத்தும் மேவுகை செய்யப்பட்டு உள்ளகக் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | அத்தகைய செயற்திறனின்மைகளை தடுப்பதன் மூலம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. |

**5. மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 02 உதவிச் செயலாளர் பதவிகள், 02 பொறியியலாளர் பதவிகள், 03 உதவிப் பணிப்பாளர் பதவிகள், நிர்வாக உத்தியோகத்தர் பதவி, 02 மொழிபெயர்ப்பாளர் பதவிகள், 05 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள், 06 முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் மற்றும் 06 சாரதி பதவிகள் உள்ளடங்கலாக 36 பதவியணி வெற்றிடங்கள் காணப்பட்டன. | உரிய நிறுவனங்களுடன் இணைந்து தேவையான பதவியணி வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும் அல்லது மிகைப் பதவிகள் விடயத்தில் திறைசேரியுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். | அவ் வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம், பொறியியல் சேவை சபை மற்றும் பொது நிர்வாக அமைச்சின் செயலாளரிற்கு பல வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டிருந்த போதிலும் பதில்களெதுவும் பெறப்படவில்லை. அவ் வெற்றிடங்கள் காரணமாக அமைச்சின் கடமைகளை செயற்திறனாக நிறைவேற்றத் தவறியமை, வட மாகாணத்தில் இடம்பெற்ற வீடமைப்பு செயற்திட்டங்கள் மற்றும் துரித அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யத் தவறியமை மற்றும் உரிய காலத்தில் ஆவணங்களை மொழிபெயர்க்க முடியாதிருந்தமை போன்ற சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன. |